டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.04.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 247 - Madurai | Online Edition

# இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தீர்வுகளைக் கட்டமைக்க ஐஐடிஎம் பிரவர்தக், சர்வம் ஏஐ நிறுவனம் ஆகியவை கூட்டாண்மையை ஏற்படுத்துகிறது

புது தில்லி, ஏப்.15

மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தொழில்துறைகளுக்காக செயற்கை நுண்ணறிவு தீர்வுகளைக் கட்டமைக்க ஐஐடிஎம் பிரவர்தக் தொழில்நுட்ப அறக்கட்டளையும், சர்வம் ஏஐ (ஆக்சன்வைஸ் தனியார் நிறுவனம்) ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன.

இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு சூழலின் முன்னோடியாகத் திகழும் இரண்டு நிறுவனங்களின் வலிமைகளை ஒருங்கிணைக்கும் இந்தப் கூட்டாண்மை, தொழில்நுட்பத் தற்சார்பை நோக்கிய இந்திய பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக அமைகிறது. இந்தக் கூட்டு முயற்சி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐஐடிஎம் பிரவர்தக் தொழில்நுட்ப அறக்கட்டளை, சர்வம் ஏஐ இடையே அண்மையில் கையெழுத்தானது.

இந்தியா தமது தேசிய செயற்கை நுண்ணறிவு செயல் திட்டத்தை விரைவுபடுத்தி வரும் நிலையில், இந்திய மொழிகளைப் புரிந்துகொள்ளும், இந்தியச் சூழல்களைப் பிரதிபலிக்கும் மற்றும் இந்தியக் கட்டமைப்புகளிலேயே இயங்கும் செயற்கை நுண்ணறிவு அமைப்புகளுக்கான தேவை முன்னெப்போதையும் விட தற்போது மிக அதிகமாக உள்ளது. இந்தியாவிற்காகவே அடிப்படையிலிருந்து கட்டமைக்கப்பட்ட, பலமொழி சார்ந்த செயற்கை நுண்ணறிவு தீர்வுகள் மற்றும் விரிவாக்கக் கூடிய செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம், சர்வம் ஏஐ நிறுவனம் இத்துறையில் ஒரு முன்னணி சக்தியாக உள்ளது.

இந்திய மொழிகள் மற்றும் சூழல்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பலமொழி மொழி மாதிரிகள், உரையாடல் சார்ந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் பேச்சுத் தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட, இந்தியாவை மையமாகக் கொண்ட அடிப்படை செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்கும் தமது நிபுணத்துவத்தை இந்தக் கூட்டாண்மைக்கு வழங்குகிறது.

# மூன்று மாவட்டத்தில் வெயில் 104 டிகிரியை எட்டியது

சென்னை, ஏப்.15

தமிழகத்தில் 3 மாவட்டங்களில் நேற்று முன்தினம் 104 டிகிரி வெயில் கொளுத்தியது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வெப்பமும் இயல்பைவிட 2-3 செல்சியஸ் அதிகரித்து வருகிறது. வெப்பநிலையில் பெரிய மாற்றம் ஏதும் நிகழாத நிலையில், அதிகபட்ச வெயில் கரூர், தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் நேற்று 104 டிகிரியாக இருந்தது. மேலும், சேலம், மதுரை, நாமக்கல், ஈரோடு, கோவையில் 102 டிகிரி வெயில் இருந்தது.

இந்நிலையில், வளி மண்டலத்தில் தெற்கு அசாம் முதல் தென் தமிழகம் வரையில், ஜார்க்கண்ட, மேற்குவங்கம், ஒடிசா, சட்டீஸ்கர், தெலங்கானா மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப்பாதை நீடித்து வருகிறது. அதன் காரணமாக 20ம் தேதி வரையில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யும். பிற இடங்களில் வறண்ட வானிலை நிலவும்.

இதற்கிடையே, 18ம் தேதி வரையில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவாகவே இருக்கும். சென்னையில் இயல்பை ஒட்டியே வெப்பநிலை நீடிக்கும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கடும் வெப்பத்தால் மலர் சாகுபடி பாதிப்பு

கிருஷ்ணகிரி, ஏப்.15

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பகுதியில் போதிய அளவிற்கு கோடை மழை பெய்யாததால், கடந்த ஏப்ரல் மாதம் முதல் கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. சுட்டெரிக்கும் வெயிலால் நீர் நிலைகள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன. வனப்பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருவதால் யானை, மான் உள்ளிட்ட வனவிலங்குகள் தண்ணீர் தேடி கிராம பகுதிகளை நோக்கி படையெடுக்கின்றன.

தேன்கனிக்கோட்டை, தளி பகுதிகளில் விவசாயிகள் பன்னீர்ரோஜா, சாமந்தி, செண்டுமல்லி அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். கடும் வெயில் வாட்டி வதைப்பதால் மொட்டுகள் கருகி விடுகின்றன. மேலும், மலர்கள் உதிர்கின்றன. இதனால், மகசூல் குறைந்துள்ளது, லட்சக்கணக்கில் செலவு செய்துள்ள விவசாயிகள் மகசூல் குறைந்துள்ளதால் நஷ்டத்திற்குள்ளாகி உள்ளனர். கோடை வெயிலால் மலர்கள் கருகி விடுவதாகவும், தரம் குறைந்துள்ளதால் உரிய விலையும் கிடைப்பதில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல்
நகை எடுக்க வரும்போது
**அக்ரி டாக்டர் வாசகர்**
என்று அறிமுகப் படுத்திக்
கொண்டு சிறப்பான
சேவையையும், பிரத்யேக
தள்ளுபடியும் பெறுங்கள்.
இந்த தள்ளுபடி உங்களுக்கு
மட்டுமே அதுவும் எல்லா
நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாகக் கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

*நேற்றைய தொடர்ச்சி...*

### அடுப்பில்லா பழ உணவுகளின் நன்மைகள்

அடுப்பில்லா சமையலில் பழங்களை அடிப்படையாகக் கொண்ட உணவுகளை உட்கொள்வது பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

**ஊட்டச்சத்துக்கள் பாதுகாப்பு :** வெப்பம் பயன்படுத்தப்படாததால், பழங்களில் உள்ள வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் என்சைம்கள் முழுமை யாகப் பாதுகாக்கப்படுகின்றன [1].

செரிமான மேம்பாடு : பழங்களில் உள்ள நார்ச்சத்து செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கிறது [2].

**எடை கட்டுப்பாடு :** இந்த உணவுகள் பொதுவாக கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் இருப்பதால், எடை இழப்பு மற்றும் கட்டுப்பா ட்டிற்கு உதவுகின்றன [3].

**ஆற்றல் அதிகரிப்பு :** பழங்களில் உள்ள இயற்கையான சர்க்கரைகள் உடனடி ஆற்றலை வழங்குகின்றன.

**ஆண்டி ஆக்ஸிடன்ட்கள் :** பழங்களில் உள்ள ஆண்டி ஆக்ஸி டன்ட்கள் உடலை ப்ரீரேடிக்கல் சேதத்திலிருந்து பாதுகாக் கின்றன, இது நாள்பட்ட நோ ய்களின் அபாயத்தைக் குறைக்கிறது [4].



**சமையல் எளிமை :** அடுப்பில்லா சமையல் மிகவும் எளிமை யானது மற்றும் குறைந்த நேரத்தில் தயாரிக்கக்கூடியது, குறிப்பாக அவசர காலங்களில் அல்லது சமையல் வசதிகள் இல்லாதபோது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**எச்சரிக்கைகள்**

அடுப்பில்லா பழ உணவுகள் ஆரோக்கியமானவை என்றாலும், சில எச்சரிக்கைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**சுகாதாரம் :** பழங்களை நன்கு கழுவி சுத்தம் செய்வது மிகவும் முக்கியம், ஏனெனில் சமைக்கப்படாத உணவுகளில் பாக்டீரியா தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது [5].

**பழங்களின் தேர்வு :** புதிய மற்றும் பழுத்த பழங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கெட்டுப்போன அல்லது அழுகிய பழங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

**ஒவ்வாமை :** சிலருக்கு குறிப்பிட்ட பழங்களால் ஒவ்வாமை ஏற்படலாம். அத்தகைய பழங்களைத் தவிர்ப்பது அவசியம்.

சமச்சீர் உணவு : அடுப்பில்லா பழ உணவுகள் ஒரு சமச்சீர் உணவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். புரதம் மற்றும் பிற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான உணவு முறைக்கு இது ஒரு துணை மட்டுமே.

சர்க்கரை அளவு : பழங்களில் இயற்கையான சர்க்கரை இருந் தாலும், அதிகப்படியான பழங்களை உட்கொள்வது சர்க்கரை அளவை அதிகரிக்கலாம், குறிப்பாக நீரிழிவு நோயாளிகள் கவனமாக இருக்க வேண்டும்.

**முடிவுரை**

அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகள் ஆரோக்கியமான, சுவை யான மற்றும் எளிமையான உணவுத் தேர்வுகளாகும். இவை உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதுடன், சமையல் நேரத்தையும் குறைக்கிறது. சரியான சுகாதார முறை களைப் பின்பற்றி, சமச்சீர் உணவு முறையின் ஒரு பகுதியாக இந்த உணவுகளை உட்கொள்வதன் மூலம், அவற்றின் முழுமையான நன்மைகளைப் பெறலாம். இருப்பினும், தனிப்பட்ட உடல்நலத் தேவைகள் மற்றும் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொண்டு பழங்களைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.

**மேற்கோள்கள்**

[1] Healthline - Fruit Diet: Benefits, Risks, and More : https://www.healthline.com/health/food-nutrition/fruit-diet

[2] WebMD - Raw Food Diet Review: Benefits, What You Eat, & More : https://www.webmd.com/diet/raw-foodsdiet

[3] UCLA Health - What is the raw food diet?: https://www.uclahealth.org/news/article/what-raw-food-diet

[4] Medical News Today - The raw food diet: Types, benefits, and risks: https://www.medicalnewstoday.com/articles/7381

[5] Dr. Axe - Raw Food Diet: Benefits, Risks and How to Follow: https://draxe.com/nutrition/raw-food-diet/

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

# நாமக்கல் உழவர் சந்தையில் காய்கறிகள் விற்பனை அமோகம்

நாமக்கல், ஏப்.15

தமிழ்புத்தாண்டையொட்டி, நாமக்கல் உழவர் சந்தையில், காய்கறி மற்றும் பழங்கள் அதிகளவில் விற்பனையானது. தமிழ் புத்தாண்டு தினமாக நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, நாமக்கல் உழவர் சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் வரத்து அதிகரித்தது.

கத்தரிகாய், வெண்டை, பூசணி, கேரட், தக்காளி மற்றும் ஆப்பிள், சாத்துக்குடி, வாழை உள்ளிட்ட பழங்கள் அதிகம் கொண்டு வரப்பட்டது.

வழக்கமாக விற்பனை செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்களை விட அதிகளவில் அனைத்து காய்கறிகள், பழங்கள் மற்றும் இளநீர் உள்ளிட்டவைகள் வழக்கதை விட அதிகம் விற்பனையானது.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL



Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com


For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கோடை உழவின் அவசியமும் விதைப்பரிசோதனையின் அவசியமும்!

கோடைஉழவு செய்வதால் நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண் கட்டிகள் உடைந்து மண் அரிப்பு தடுக்கப்பட்டு சத்துக்கள் இழப்பு குறைகிறது.

மழை காலத்தில் பெய்யும் மழை நீர் வடிந்து வீணாகாமல் மண்ணுக்குள் சென்று நிலத்தடி நீர் மட்டம் உயர்கிறது.

கோடை உழவில் ஆழமாக உழுவதால் கடினமான மேலோட்டமான மேல் அடுக்கு உடைந்து மண்ணின் நாள்பட்ட இறுக்கம் தளர்த்தப்பட்டு மண்ணின் ஊடுருவல் திறன் மற்றும் ஊடுருவக்கூடிய தன்மை அதிகரிக்கிறது. இது மண்ணின் ஈரப்பதத்தை அதிகரித்து மண்ணின் நீர்ப்பிடிப்பு திறனை அதிகரிக்கச் செய்கிறது.

கோடை உழவில் ஆழமாக உழுது மேல் மண்ணை கீழாகவும், கீழ் மண்ணை மேலாகவும் புரட்டி விடுவதால் மண்ணில் காற்றோட்டம் மேம்பட்டு நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரிக் கிறது. மண்ணில் காற்றோட்டம் அதிகரிப்பதால் களைக்கொல்லி, பூச்சிக் கொல்லி எச்சம் மற்றும் வேர் களைகள் மூலம் வெளிப்படும் தீங்கான ரசாயனம் விரைவாக சிதைவடைகிறது.

மண்ணின் மூலம் பரவும் பூச்சி, முட்டை, புழு மற்றும் கூட்டுப் புழுக்கள் அழிக்கப்படுகிறது. அடுத்தடுத்த பயிர் சாகுபடியில் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பு குறைகிறது.

**விதைப் பரிசோதனை அவசியம்**

தரமான விதைகளை அடையாளம் காணவும் நோய்கள் மற்றும் பூச்சிகள் இல்லாத விதைகளை தெரிந்து கொள்ளவும், சாகுபடியின் நம்பகத்தன்மையை மேம்படுத்தி அதிக மகசூல் பெற உதவுகிறது.

விதைக் குவியலின் தரம் அறிவதால் விதையின் அளவு தெரிந்து விதைக்கலாம். விதைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதை தரங்களை விதைகள் கொண்டுள்ளனவா என அறிந்து கொள்ளலாம். விதை தரம் அறிந்து விதைப்பதால் நல்ல மகசூல் மற்றும் நல்ல வருவாய் கிடைக்கிறது.

விவசாயிகளுக்கும், விதை விற்பனையாளர்களுக்கும் விதை உற்பத்தியாளர்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்ய வாங்கும் விதைகளையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல் பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி களை ரூபாய் 80/- (ரூபாய் எண்பது மட்டும்) ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் நெல் விதை 50 கிராம், உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம், காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் 10 கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி 100 கிராம், பாகல், புடல் 250 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



# பட்டு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் : வெற்றிக்கதை ஒரு பார்வை



மதுரை, ஏப்,15

வழக்கமான விவசாயத்தை தாண்டி புதிய முயற்சிகள் எடுக்கலாமா என சிந்திக்கும் விவசாயிகள் பலர் சரியான வழிகாட்டுதல் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். 'புதிய முயற்சி நமக்கு சாத்தியமா என தடுமாறுபவர்கள் பலர் உண்டு. ஒரு சிறு விவசாயியாகத் தொடங்கி, இன்று ஒரு பெரும் மனிதராக உயர்ந்துள்ள பட்டு வளர்ப்புப் பணியாளரான சின்னன் பலருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

சின்னன், தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் வசிக்கிறார். சின்னன், தனது சிறு அளவிலான பட்டு வளர்ப்புத் தொழிலைத் தொடங்கினார். அவர் ஆரம்ப நாட்களில் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், தன்னம்பிக்கை மற்றும் கடின உழைப்பின் மூலம் முன்னேறினார். அதிக உற்பத்தியை, அவர் புதிய விவசாய நுட்பங்களைக் கற்றுக்கொண்டு, தரமான மல்பெரி நாற்றுகளை வளர்த்து, தனது பட்டுப்புழுக்களைக் கவனமாகப் பராமரித்தார்.

அவரது முயற்சிகளையும் சாதனைகளையும் அங்கீகரிக்கும் விதமாக, அவருக்கு மாவட்ட அளவில் இரண்டு முறை "சிறந்த பட்டு விவசாயி" விருது வழங்கப்பட்டது. மேலும், மாநில அளவில் தனது சிறப்பான செயல்பாட்டிற்காக மாநில விருதையும் அவர் பெற்றார். இந்த விருதுகள் அவரது அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பிற்கான அங்கீகாரமாகும்.

தற்போது சின்னன், மாதம் ரூ. 80,000 சம்பாதித்து வருகிறார். அவர் தனது குடும்பத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், மற்ற



விவசாயிகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்கிறார். பலர் அவரை முன்மாதிரியாகக் கொண்டு, பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு முன்னேறி வருகின்றனர்.

சின்னனின் வாழ்க்கை, 'கடின உழைப்பின் மூலம் உயர்வடைவீர்கள்' என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தகவல் : ***டாக்டர் ஜே.ஐ.ஜெர்ஜின், உதவிப் பேராசிரியர், வேளாண்மை விரிவாக்கம் மற்றும் போடிநாயக்கனூர் கிராம தங்குதல் மாணவிகள், கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, மதுரை.***



# மீன்பிடி தடைக்காலம் ஏன்? எப்போது ஆரம்பம் என்ற தகவல் தெரியுமா?



மீன் பிடி தடைக்காலம் என்பது கடல் வளத்தையும் பாது காக்கவும், மீன்களின் உற்பத்தியை பெருக்கவும் ஆண்டு தோறும் 61 நாட்களுக்கு கடைபிடிக்க தமிழக கடல் மீன் பிடி ஒழுங்குமுறைபடுத்தும் சட்டம் 1983யின் கீழ் அமல் படுத்தப்பட்டு வருகிறது.

**எப்போது? ஆரம்பம்?**

மீன்பிடி தடைகாலம் நேற்றிலிருந்து அதாவது புதன் கிழமையில் ஆரம்பம். ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலம் மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் காலமாகும். அந்த காலத்தில் விசைபடகுகளின் இயந்திர இரைச்சல் (ENGINE SOUNDS) மற்றும் ராட்சத வலைகளால், மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு அதாவது ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை கடலுக்கு ஓய்வு அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக சிறிய மீன் குஞ்சுகள் அழிவதை தடுத்து வருங்காலங்களில் மீன்வளம் பெருகிட வழிவகை செய்யப்படும்.

**மீன்பிடி தடை காலத்தில் எந்த எந்த மீன்கள் அரிதாக கிடைக்கும்?**

விசைப்படகு மூலம் ஆழ்கடலில் பிடிக்கப்படும் மீன்கள் தடைக்காலம் முடியும் வரை தாராளமாக கிடைக்காது.

இதனால் மீன்களை விரும்பும் மக்கள் ஏமாற்றமான சூழ்நிலை உருவாகும். வஞ்சீரம், கொடுவா, கருப்பு வாவ்வால் சிலா ஊழி பெரிய சங்கரா பாறை மீன் சுறா திருக்கை, நெய்மீன், நண்டு கணவாய், வாளை போன்ற மீன்கள் கிடைப்பது அரிதாகும்.

சிறிய வகை மீன்களான நெத்திலி, சாளைமீன், மந்தி போன்ற மீன்கள் மட்டுமே சந்தைக்கு வரும். அதுவும் வழக்கமான விலைகளை விட கூடுதலாக தான் விற்பனை செய்யப்படும்.

**எங்கெல்லாம் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது? தெரியுமா?**

தமிழகத்தின் வடக்கே திருவள்ளூவர் முதல் தெற்கே கன்னியாகுமரி (கிழக்கு கடற்கரை வரையிலான 1076 கி.மீ நீளமுள்ள கடலோர பகுதிகளில்) இந்த தடை அமலுக்கு வரும்.

**எந்த எந்த மாவட்டங்களில் இது அமுல்படுத்தப்படுகிறது?**

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை மற்றும் கன்னியாகுமரி.

**மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்கள் உதவி தொகை (நிவாரணம்) வழங்கப்படுமா?**

இந்த தடைக்காலத்தில் தங்களுடைய மீன்பிடி தொழில் பாதிக்கப்படுவதால், அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 8000 (EIGHT THOUSAND ONLY) வழங்கப்படுகிறது. தடைக்காலம் அமலுக்கு வரும்போது மீனவர்கள் கடலுக்குள் இருக்க கூடாது என்பது விதிமுறையாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மாமரங்களில் காய் பிடிப்பு அதிகரிப்பு



தர்மபுரி, ஏப்.15

தர்மபுரி மாவட்டத்தில், மாமரங்களில் காய்கள் அதிகளவில் பிடித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.


தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தில் அதிகளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேரிலும், தர்மபுரி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஹெக்டேரிலும் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பெங்களூரா, நீலம், செந்தூரா, குண்டு, அல்போன்சா, பீத்தர், பங்கனப்பள்ளி உள்ளிட்ட ரகங்கள் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது.

இது தவிர வேறு சில ரகங்களும் குறைந்த பரப்பில் நடப்பட்டு உள்ளது. தற்போது பெங்களூரா, செந்தூரா மா மரங்களில் சீசனையொட்டி பிஞ்சுகள் அதிகளவில் காய்த்துள்ளன.

கடந்த சில நாட்களாக தர்மபுரி மாவட்டத்தின் சுற்று வட்டாரங்களில் லேசான கோடை மழை பெய்து வருகிறது. இந்த மழை காய் பிடித்திருக்கும் மாங்காய்கள் பருத்து தரமான மாங் காய்களாக வர வாய்ப்பு உள்ளது. விரைவில் மாமரங்கள் அறுவடைக்கு தயார் ஆவதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அரியலூர் மாவட்டத்திற்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளது

## வேளாண் துறை தகவல்

அரியலூர், ஏப்.15

அரியலூர் மாவட்டத்தில் தற்போது யூரியா 3055 மெட்ரிக் டன், டிஏபி 1490 மெட்ரிக் டன், பொட்டாஷ் 705 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 3262 மெட்ரிக் டன், சூப்பர் பாஸ்பேட் 617 மெட்ரிக் டன் என மாவட்டத்திற்கு போதுமான அளவு இருப்பில் உள்ளதென மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.



இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் மேலும் கூறியதாவது,

அரியலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனையாளர்கள் உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்கு களுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது.

அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம்.

தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். விவசாயிகள் உரங்களை எப்பொழுதும் பயிருக்கு ஒருங்கிணைந்த உர நிர்வாகத்துடன், சமச்சீர் உரங்கள் ஆன அனைத்து வகையான வேளாண்மை இயற்கை எரு, பண்ணை மற்றும் மண்புழு எரு உரம், பசுந்தால் பயிரை மடக்கி உழவு செய்தல், வேளாண்மை வட்டார மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்கள், அசோலா நீலப்பச்சை பாசி, அனைத்து வகையான பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்ட சத்து உரங்களை சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப் படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# சித்திரை மாதச் சிறப்புகள் - ஒரு பார்வை

தமிழ் நாட்காட்டியின் முதல் மாதமான சித்திரை, வசந்த காலத்தின் தொடக்கமாகவும், தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாகவும் திகழ்கிறது.

'சித்திரை' என்ற சொல் 'சித்திரா' என்ற நட்சத்திரத்தின் பெயரிலிருந்து உருவானது. இது ஒளி, அழகு மற்றும் பிரகாசத்தைக் குறிக்கிறது. வானியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், சமூக ரீதியாகவும் இம்மாதம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது.

**வானியல் மற்றும் அறிவியல் பின்னணி**

சித்திரை மாதம் சூரியன் மேச ராசிக்குள் பிரவேசிப்பதைக் குறிக்கிறது. இது மேச ரவி என்று அழைக்கப்படுகிறது. வானியல் ரீதியாக, இது பூமியின் வட அரைக்கோளத்தில் வசந்த காலத்தின் உச்சத்தைக் குறிக்கிறது.

- **நட்சத்திரத் தொடர்பு :** சித்திரை மாதத்தின் பௌர்ணமி அன்று சந்திரன் 'சித்திரை' நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் இம்மாதத்திற்கு இப்பெயர் வந்தது.
- **காலநிலை :** பனிக்காலம் முடிந்து வெயில் காலம் தொடங்கும் 'இளவேனில்' காலத்தின் தொடக்கமாக இது அமைகிறது.

**தமிழ் புத்தாண்டு மற்றும் கலாச்சார மரபுகள்**

சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப் படுகிறது. இது புதிய தொடக்கத்தின் அடையாளமாகும்.

**1. கனி காணுதல் :** புத்தாண்டு அன்று அதிகாலையில் தங்கம், வெள்ளி, பழங்கள், தானியங்கள் மற்றும் கண்ணாடியைப் பார்ப்பது அந்த ஆண்டு முழுவதும் செழிப்பைத் தரும் என்பது நம்பிக்கை.

**2. பஞ்சாங்க வாசிப்பு :** அன்றைய தினம் கோயில்களிலும் வீடுகளிலும் அந்த ஆண்டின் பலன்களைக் கூறும் பஞ்சாங் கத்தைப் படிப்பது மரபு.

**3. அறுசுவை உணவு :** வேப்பம்பூ (கசப்பு), வெல்லம் (இனிப்பு), மாங்காய் (புளிப்பு), உப்பு, மிளகாய் (காரம்) போன்றவற்றை உள்ளடக்கிய 'மாங்காய்ப் பச்சடி' உண்ணப்படுகிறது. இது வாழ்வில் இன்பம், துன்பம் என அனைத்து உணர்வுகளையும் சமமாக ஏற்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

## ஆன்மீக மற்றும் புராணச் சிறப்புகள்

சித்திரை மாதத்தில் பல முக்கிய ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறு கின்றன :



● சித்திரைத் திருவிழா (மதுரை) : உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் – சொக்கநாதர் திருக்கல்யாணமும், அழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வும் இம்மாதத்தின் பெரும் சிறப்பம்சமாகும். இது சைவ மற்றும் வைணவ சமயங்களை இணைக்கும் ஒரு மாபெரும் சமூக விழாவாகும்.

● **சித்ரா பௌர்ணமி** : மனிதர்களின் பாவ புண்ணியக் கணக்குகளை எழுதும் 'சித்ரகுப்தனுக்கு' உகந்த நாளாக இது கருதப்படுகிறது.

● **அவதாரங்கள்** : சித்திரை மாதச் சுக்கில பஞ்சமியில் மகாலட்சுமி பூமிக்கு வந்ததாகவும், அஷ்டமியில் அம்பிகை அவதரித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

## இலக்கியக் குறிப்புகள்

சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை சித்திரையின் சிறப்புகள் பேசப்படுகின்றன :

● **நெடுநல்வாடை** : பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான நெடுநல்வாடையில், மே ராசியில் சூரியன் சஞ்சரிப்பது பற்றிய குறிப்புகள் உள்ளன.

● **சிலப்பதிகாரம்** : புகார் நகரில் கொண்டாடப்பட்ட 'இந்திர விழா' சித்திரை மாதத்தில் நடைபெற்றதாக இளங்கோவடிகள் விவரிக்கிறார்.

● **பக்தி இலக்கியம்** : திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பதிகங்களில் மயிலாப்பூரில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## வேளாண்மைச் சிறப்பு (சித்திரைப் பட்டம்)

தமிழக விவசாயத்தில் 'சித்திரைப் பட்டம்' மிக முக்கியமானது.

● **பொன் ஏர் பூட்டுதல்** : சித்திரை முதல் நாளில் விவசாயிகள் நிலத்தை உழுது விவசாயப் பணிகளைத் தொடங்குவர்.




● **பயிர் சாகுபடி :** இம்மாதத்தில் உளுந்து, பாசிப்பயறு, எள், நிலக்கடலை மற்றும் கம்பு போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கோடை மழையைப் பயன்படுத்திச் செய்யப்படும் இந்தச் சாகுபடி 'இறவைச் சாகுபடி' எனப்படுகிறது.

● **சமூக அறம் : தண்ணீர் பந்தல்**

சித்திரை மாதத்தின் கடும் வெப்பத்தைத் தணிக்க, முன்னோர்கள் ஆங்காங்கே 'தண்ணீர் பந்தல்' அமைத்து நீர், மோர் மற்றும் பானகம் வழங்குவதை ஒரு பெரும் அறமாகச் செய்தனர். இது இன்றும் பல இடங்களில் தொடர்கிறது.

சித்திரை மாதம் என்பது வெறும் காலக் கணக்கீடு மட்டுமல்ல; அது தமிழர்களின் வாழ்வியல், வானியல் அறிவு, ஆன்மீகம் மற்றும் வேளாண்மை ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்த ஒரு கலாச்சாரக் கருவூலமாகும். இயற்கையோடு இணைந்து வாழ்வதையும், புதிய நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடங்கு வதையும் இம்மாதம் நமக்குக் கற்பிக்கிறது.

தகவல் : ***கோ. சுரேஷ்குமார். (Rt. Agri vocational Instructor) கோவில்பட்டி.***

# வெற்றிலை விலை உயர்வு



நாமக்கல், ஏப்.15

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் சுற்றுவட்டார பகுதிகளில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிரிடப் பட்டுள்ளது. இங்கு விளையும் வெற்றிலை பல்வேறு மாநிலம், மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த வாரம் வெள்ளைக்கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட சுமை ரூ.8,000க்கும், கற்பூரி வெற்றிலை மார் சுமை ஒன்று ரூ.4,000க்கும், வெள்ளைக் கொடி வெற்றிலை முதியம் ரூ.3,000க்கும், கற்பூரி வெற்றிலை ரூ.1,500க்கும் ஏலம் போனது. நேற்று முன்தினம், நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை மார் 104 கவுளி கொண்ட சுமை, ரூ.9,500க்கும், கற்பூரி வெற்றிலை ரூ.6,000க்கும், வெள்ளைக் கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.5,000கும், கற்பூரி வெற்றிலை மார் ரூ.4 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. வெற்றிலை விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் துல்லிய வேளாண்மை – எதிர்கால விவசாயத்தின் புதிய முகம்

**அறிமுகம்**

இன்றைய உலகில் வேளாண்மை துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வரும் தொழில்நுட்பங்களில் முக்கிய மானவை செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) மற்றும் துல்லிய வேளாண்மை (Precision Agriculture) ஆகும். மக்கள் தொகை அதிகரிப்பு, காலநிலை மாற்றம், நீர் பற்றாக் குறை போன்ற சவால்களை சமாளிக்க புதிய தீர்வுகள் தேவைப் படுகிறது. இந்த சூழலில், AI மற்றும் துல்லிய வேளாண்மை விவசாயத்திற்கு புத்துணர்ச்சி அளிக்கின்றன.

**செயற்கை நுண்ணறிவு (AI) என்றால் என்ன?**

செயற்கை நுண்ணறிவு என்பது மனித நுண்ணறிவை ஒத்த முறையில் இயந்திரங்கள் சிந்தித்து, முடிவெடுத்து, கற்றுக் கொள்ளும் திறனை குறிக்கிறது. இது தரவு (data) அடிப்படையில் செயல்பட்டு, விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்க உதவுகிறது.

**AI பயன்படுத்தப்படும் முக்கிய பகுதிகள் :**

- நோய் கண்டறிதல்
- விளைச்சல் கணிப்பு
- வானிலை பகுப்பாய்வு
- தானியங்கி இயந்திரங்கள்

**துல்லிய வேளாண்மை என்றால் என்ன?**

துல்லிய வேளாண்மை என்பது நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, தேவையான அளவு நீர், உரம், பூச்சிக்கொல்லி போன்றவற்றை சரியான அளவில் பயன்படுத்தும் முறையாகும். இது "ஒரே மாதிரி எல்லா நிலத்திற்கும் ஒரே முறையைப் பயன்படுத்துவது" என்ற பழைய அணுகுமுறையை மாற்றுகிறது.

**இதன் முக்கிய நோக்கங்கள் :**

- வளங்களை சேமித்தல்

- செலவை குறைத்தல்
- மகசூலை அதிகரித்தல்
- சுற்றுச்சூழலை பாதுகாத்தல்

**AI மற்றும் துல்லிய வேளாண்மை இணைப்பு**

AI மற்றும் துல்லிய வேளாண்மை இணைந்து செயல்படும் போது மிகுந்த பயன்களை அளிக்கின்றன. சென்சார்கள், செயற்கைக்கோள் படங்கள், டிரோன்கள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளை AI பகுப்பாய்வு செய்து விவசாயிகளுக்கு வழிகாட்டுகிறது.

**முக்கிய பயன்பாடுகள்**

**1. பயிர் நோய் கண்டறிதல் –** AI மூலம் இலைகளின் படங்களை ஆய்வு செய்து நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிய முடிகிறது. இதனால் விரைவான சிகிச்சை வழங்க முடிகிறது.

**2. துல்லிய நீர்ப்பாசனம் –** மண் ஈரப்பதம் மற்றும் வானிலை தரவுகளை வைத்து, தேவையான அளவு மட்டுமே நீர் வழங்கப் படுகிறது. இது நீர் வீணாவதை தடுக்கிறது.

**3. விளைச்சல் கணிப்பு –** AI முறைமைகள் முந்தைய தரவுகள் மற்றும் தற்போதைய சூழ்நிலைகளை வைத்து எதிர்கால மகசூலை கணிக்கின்றன.

**4. டிரோன் பயன்பாடு – டிரோன்கள் மூலம் :**

- உரம் தெளித்தல்
- பூச்சிக்கொல்லி தெளித்தல்
- நில கண்காணிப்பு செய்யப்படுகிறது.

5. மண் ஆராய்ச்சி – மண் தரம், pH அளவு, ஊட்டச்சத்து போன்றவற்றை AI ஆய்வு செய்து சரியான பரிந்துரைகளை வழங்குகிறது.

**நன்மைகள்**

- மகசூல் அதிகரிப்பு
- நீர் மற்றும் உரம் சேமிப்பு
- செலவு குறைவு
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

- நேரம் சேமிப்பு

**சவால்கள்**

AI மற்றும் துல்லிய வேளாண்மை பல நன்மைகள் கொண்டு இருந்தாலும், சில சவால்களும் உள்ளன :

- தொழில்நுட்ப அறிவு குறைவு
- அதிக முதலீடு தேவை
- கிராமப்புறங்களில் இணைய வசதி குறைவு
- பயிற்சி பற்றாக்குறை

**இந்தியாவில் பயன்பாடு**

இந்தியாவில் பல மாநிலங்களில் AI மற்றும் துல்லிய வேளாண்மை மெதுவாக பரவுகிறது. அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குகின்றன. டிஜிட்டல் இந்தியா போன்ற திட்டங்கள் இந்த மாற்றத்தை வேகப்படுத்துகின்றன.

**எதிர்கால வாய்ப்புகள்**

- முழுமையாக தானியங்கி பண்ணைகள்
- ரோபோட்கள் மூலம் அறுவடை
- AI அடிப்படையிலான சந்தை கணிப்பு
- விவசாயிகளுக்கு நேரடி ஆலோசனை

**முடிவு**

செயற்கை நுண்ணறிவு மற்றும் துல்லிய வேளாண்மை இணைந்து விவசாய துறையில் புதிய புரட்சியை உருவாக்கு கின்றன. இது விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவ தோடு, உணவு பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. எதிர் காலத்தில் இந்த தொழில்நுட்பங்கள் மேலும் பரவி, விவசாயத்தை சீரமைக்கும் முக்கிய சக்தியாக மாறும்.

**“நவீன தொழில்நுட்பம் + பாரம்பரிய அறிவு = வளமான விவசாயம்”**

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com***


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396